பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 01 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் சிறந்த நிர்வாக நடைமுறைகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை மட்டுமே தேசிய ஜனநாயக கூட்டணி அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. மக்கள் விரோத அரசாக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தூரில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் சிறந்த நிர்வாக நடைமுறைகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாடு மு

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்கள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிப்பதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் வளர்ந்து வரும் இந்தியாவின் தொழில்நுட்பத் திறனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரயில் வழித்தடங்கள் மின்மயமயமாக்குவது, ரயில் நிலையங்களை ம

நாடு முழுவதும் **150** - க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் ஏழை மற்றும் நடுத்தர பிரிவைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பயனடைந்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளை மட்டுமே தேசிய ஜனநாயக கூட்டணி அளித்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிற மாநிலங்களைப் போல் இரட்டை எஞ்சின் அரசு அமைந்தால் தமிழகத்தில் வளர்ச்சி நடவடிக்கைகள் உத்வேகம் பெறும் என்று அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 23ஆம் தேதி நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்க உள்ளதாகவும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

மகாராஷ்டிரா, கேரளா மாநிலங்களில் பெற்றுள்ள வெற்றியைப் போல் தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அஇஅதிமுக தேர்தல் அறிக்கையில் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் வேலை நாட்கள் 150ஆக அதிகரிக்கப்படும் என்ற வாக்குறுதியை வரவேற்பதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

மாநில அரசு மேற்கொண்டு வரும் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் உட்பட மக்களின் நிரந்தர வாழ்வாதாரத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வருவதற்கு முன்பாக பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று திரு. சேகர் பாபு கூறினார்.

<<<<>>>>

மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசின் திட்டங்கள்

மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, உரிமைத்தொகை உள்ளிட்ட திட்டங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்துப் பிரிவைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் வகுக்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது தேசிய மாணவர் படையின் செயல்பாடுகள் அவர்களது துணிச்சலை வெளிப்படுத்தும் வகையில் இருந்ததாக பாதுகாப்புத்துறை செயலாளர் திரு. ராஜேஷ் குமார் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், பேரிடர் மீட்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளில் அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்று குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரில் மரக்கன்று நடுவது, யமுனை ஆறு தூய்மைப் பணி உள்ளிட்ட அரசின் பல்வேறு நடவடிக்கைகளில் அவர்களது செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்று அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில் தேசிய சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும் என்று திரு. ராஜேஷ் குமார் சிங் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மக்கள் விரோத அரசாக திமுக அரசு செயல்பட்டு வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதன் காரணமாக சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக தெரிவித்தார்.

பொங்கல் பண்டிகையை ஒட்டி மது விற்பனை 518 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனையாகியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணையும் என்று திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

குளிர் காலங்களில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து லட்சக்கணக்கான பறவைகள் உணவு மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக மித வெப்பமண்டல நாடுகளை நோக்கி பறவைகள் வலசை வருவது வழக்கமான ஒன்றாகும்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணைப் பகுதியில் இவ்வாறு வலசை வந்துள்ள வெளிநாட்டுப் பறவைகள் சுற்றலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Vijyakumar - 36 Sec)**

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகையில் தொடர் விடுமுறை காரணமாக பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கு குவிந்துள்ளனர்.

கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் சென்று பார்வையிட ஆர்வம் காட்டியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Saravanan - 33 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஈரான் நாட்டு அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட கப்பலில் இருந்த 16 இந்தியப் பணியாளர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இந்தியத் தூதரக அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

--------------

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், யுக்ரைன் நாட்டு மின் உற்பத்தி நிலையங்கள் மீது மீண்டும் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

--------------

ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்களில் அமெரிக்க அரசு காரணம் என்று 3,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

--------------

என்சிஇஆர்டி பாடப்புத்தகங்களை போலியாக அச்சிட்டு விநியோகம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக சந்தேகிக்கும் 3 பேரை தில்லி காவல்துறை கைது செய்துள்ளது.

--------------

சத்தீஷ்கர் மாநிலம் பீஜாப்பூர் மாவட்டத்தில், பாதுகாப்புப் படையினருக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில், உயிரிழந்துள்ள தீவிரவாதிகளின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

--------------

திண்டுக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டியக் கலைஞர்கள் பரதநாட்டியம் ஆடி உலக சாதனை படைத்துள்ளனர்.

--------------

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற மாநில அளவிலான கபடிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு ஆயுத தொழிற்சாலை ஆடைப் பிரிவு தலைமை பொதுமேலாளர் திரு. வி.எஸ். ரெட்டி பரிசுகளை வழங்கினார்.

--------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயில் வளாகத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று திரண்டு காணும் பொங்கலைக் கொண்டாடினர்.

--------------

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது மண் சரிந்து விழுந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

இந்தூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சம நிலையில் உள்ளன.

**<<<<The End>>>>**